98741

OL/2023(2024)/22-T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)

General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | | |
|---|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | I, II | පැය තුනයි |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Tamil Language and Literature | I, II | Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'சிறுமீன் சினையினும் நுண்ணிதே' - இங்கு **சினை** என்பது
(1) கிளை (2) உறுப்பு (3) முட்டை (4) முள்ளு

**2.** 'கொற்றத்தார்க் குரிசில்...' - இங்கு **கொற்றம்** என்பது
(1) வீரம் (2) வெற்றி (3) விவேகம் (4) அரசு

**3.** 'படரெலாம் படைத்தாளை...' - இங்கு **படர்** என்பது
(1) பற்றுதல் (2) படர்தல் (3) பழி (4) துன்பம்

**4.** 'நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்' - இங்கு **நீங்குதல்** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) அகல்தல் (2) சேர்தல் (3) நெருங்குதல் (4) தோன்றல்

**5.** 'சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கிறார்' - இங்கு **ஒருமை** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) பன்மை (2) உடன்பாடு (3) வேற்றுமை (4) சமத்துவம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** இளமையைக் குறிக்கும் கன்று என்ற சொல்லால் சுட்டத்தக்கவற்றை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி
(1) பசு, பனை, பலா (2) நெல், யானை, தென்னை
(3) பலா, எருமை, யானை (4) மா, ஆடு, முயல்

**7.** Online என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) புலனம் (2) முகநூல் (3) இணையம் (4) நிகழ்நிலை

**8.** ஒத்த பொருள் தரும் சொற்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) ஆச்சரியம், அதிசயம், அதிர்ச்சி (2) அடர்த்தி, நெருக்கம், ஐது
(3) உடல், மெய், தேகம் (4) மரம், விருட்சம், தாவரம்

**9.** 'கையினால் எழுதுவதுபோல அடித்து அடித்து எழுதி திருத்தங்கள் செய்து காகிதத்தை விரயமாக்கத் தேவையில்லை' - இங்கு **அடித்தல்** என்பது
(1) அழித்தல் (2) தாக்குதல் (3) சேர்த்தல் (4) திருத்துதல்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**10.** ஒத்த பொருள் தரும் சொற்களால் ஆன இணைமொழி
(1) ஆதியந்தம் (2) சூதுவாது (3) அரைகுறை (4) ஆடிப்பாடி

**11.** ஆர்வத்தோடு எதிர்பார்த்திருப்பதை உணர்த்துவதற்கு கையாளத்தக்க அருஞ்சொற்றொடர்
(1) அகமும் முகமும் மலர்ந்து (2) வழிமேல் விழிவைத்து
(3) அருமை பெருமை அறிந்து (4) கூடிக் குலாவி

**12.** 'இளையோர் முன் கழறிய வஞ்சினம் முடித்தான்' - இங்கு **வஞ்சினம்** என்பது
(1) சூளுரை (2) கொடிய சினம் (3) சூது (4) மாறுபாடு

**13.** 'கழுத்தில் கருகமணிமாலை சதா மின்னிக் கொண்டிருக்கும்...' - இங்கு **சதா** என்னும் அடைமொழி உணர்த்தும் பொருள்
(1) நன்றாக (2) எப்போதாவது (3) எப்போதும் (4) முழுமையாக

**14.** 'ஒப்புரவு' என்பது
(1) உலகநடை அறிந்து ஒழுகுதல் (2) ஒற்றுமையாக வாழ்தல்
(3) ஒப்பிட்டு ஆராய்தல் (4) உவமை கூறுதல்

**15.** உரிய காலம் வந்ததும் நடக்க வேண்டியவை தாமே நடக்கும் என்பதை உணர்த்தும் பழமொழி
(1) ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்
(2) கனிந்த பழம் தானே விழும்
(3) நண்டு கொழுத்தால் வளைக்குள் தங்காது
(4) பொறுத்தார் பூமி ஆள்வார்

**16.** ஒருவரின் இயல்பான குணத்தை மாற்ற முடியாது என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
(2) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
(3) நாய் வாலை நிமிர்த்த முடியாது
(4) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

**17.** 'கோழிக் கூட்டினுள் சலசலப்புக் கேட்டது' - சலசலப்பு என்ற சொல்லில் உள்ள **சலசல** என்பது
(1) இணைமொழி (2) இரட்டைக் கிளவி
(3) அடுக்குத்தொடர் (4) ஒலிக்குறிப்புச் சொல்

**18.** 'நாத்தோம் இல் உரை பதறக் கதும் என உற்றெழுந்து' - இங்கு **கதும்** என்னும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்துவது
(1) அலட்சியம் (2) கோபம் (3) உறுதி (4) விரைவு

**19.** 'நாடகத்தின் இந்த உடும்புப் பிடியிலிருக்கும் வரை ஆரோக்கியமான சினிமா வளர முடியாது' - இக்கூற்றில் உள்ள **உடும்புப் பிடி** என்பது
(1) சிலேடை (2) மரபுத்தொடர் (3) குழூஉக்குறி (4) தகுதிவழக்கு

**20.** 'சொப்ட்வேர், இண்டர்பேஸ், யூபிஎஸ் என்ற வார்த்தைகள் எல்லாம் எனக்குச் சிதம்பரசக்கரமாக இருந்தன.' - **சிதம்பரசக்கரம்** என்ற மரபுத் தொடரால் உணர்த்தப்படும் பொருள்
(1) புதுமை (2) ஆச்சரியம் (3) தெளிவு (4) குழப்பம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** 'அ'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) அகிலம் (2) அன்னம் (3) அழகு (4) அணை

**22.** இடைநிலை பெற்றமைந்த பெயர்ச்சொல்
(1) பொன்னன் (2) கூத்தன் (3) அறிஞன் (4) நடிகை

**23.** கூட்டுவினை இடம்பெற்ற வாக்கியம்
(1) மாலா வேகமாக ஓடிப் போனாள்.
(2) கரீம் நன்கு படிக்கின்றான்.
(3) கண்ணன் கால் தடுக்கி விழுந்தான்.
(4) அதிபர் மாணவர்களோடு உரையாடினார்.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**24.** 'ஒடு' உருபு அடைமொழிப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) நண்பனோடு சென்றான் (2) அன்போடு வரவேற்றார்
(3) ஊரோடு ஒத்துப்போ (4) வீட்டோடு மாப்பிள்ளை

**25.** தோன்றல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்தது
(1) கல்லால் (2) சிறகால் (3) காலால் (4) மனதால்

**26.** வேற்றுமைத் தொகையாக அமையும் சொல்
(1) நாற்சந்தி (2) ஏவுகணை (3) கயல்விழி (4) மலர்மாலை

**27.** 'வானத்தைப் பார்த்து மச்சி வாடுவது என்னத்துக்கோ?' - இங்கு **வாடுவது** என்பது
(1) வினையாலணையும் பெயர் (2) தொழிற்பெயர்
(3) வினைமுற்று (4) வினையெச்சம்

**28.** அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) காடு, மேடு, வானம், நீலம் (2) நிலம், நீர், வாயு, தேயு
(3) நாடு, மேடு, வீணை, யானை (4) நகரம், நாடகம், நாணம், மாந்தர்

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) ஆக்கப்பெயர் : விளையாட்டு, படிப்பு, ஓட்டம்
(2) கூட்டுப்பெயர் : வானொலி, தொலைக்காட்சி, வட்டமேசை
(3) தனிவினை : நடந்தான், சத்தமிட்டான், பாய்ந்தான்
(4) கூட்டுவினை : விட்டுக்கொடுத்தான், தட்டிக்கேட்டான், வரவேற்றான்

**30.** (1) இணைமொழி : எலும்புந்தோலும், இசகுபிசகு, குணங்குறி
(2) அடுக்குத்தொடர் : பாம்பு பாம்பு, ஓடு ஓடு, கல கல
(3) அடுக்கிடுக்குத்தொடர் : கன்னங்கரிய, பென்னம்பெரிய, தன்னந்தனிய
(4) மரபுத்தொடர் : தட்டிக்கழித்தல், வயிற்றிலடித்தல், நுனிப்புல் மேய்தல்

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவுசெய்க.

**31.** நூறு வருடங்களுக்கு முந்திய பத்திரிகை ஒன்றைத் தேடிப் பார்வையிடுவதற்காக .................... செல்லவேண்டி ஏற்பட்டது.
(1) நூதனசாலை (2) ஆவணக்காப்பகம்
(3) தொல்பொருள் திணைக்களம் (4) அச்சகம்

**32.** உரையாசிரியர், கம்பராமாயணச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும் தெளிவான முறையில் .................... எழுதியுள்ளார்.
(1) மதிப்புரை (2) முன்னுரை
(3) பொழிப்புரை (4) விதப்புரை

**33.** போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் பலர் .................... அளிக்கப்பட்டதன் மூலம் இயல்பு வாழ்க்கைக்கு வந்துள்ளனர்.
(1) உத்தரவாதம் (2) நிவாரணம்
(3) புனருத்தாரணம் (4) புனர்வாழ்வு

**34.** உரிய .................... இன்றி வாகனத்தில் மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
(1) அனுமதிப்பத்திரம் (2) பற்றுச்சீட்டு
(3) சாரதி அனுமதிப்பத்திரம் (4) முன்னறிவித்தல்

**35.** கல்வியமைச்சுக்கான புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரரிடமிருந்து .................... கோரப்பட்டுள்ளது.
(1) விலைமனு (2) பாதீடு (3) அனுமதி (4) விண்ணப்பம்

**36.** வினை நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறை வினை என ....................
(1) சுட்டுவர் (2) சுட்டலாம் (3) சுட்டப்பெறும் (4) சுட்டுவோம்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

- கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

ஒளியும் இருளும்
'போல்றூம்' நடனம் பயிலும் கடலில்
அலைகள் தூங்கிப் போயின.
விழுந்து கிடந்த தங்கத் தூணை
தூக்கி நிமிர்த்த,
பறவைப் பெண்கள் அலறித் தடுத்தும்,
சொற் கேளாது
நீருள் இறங்கிய செந்தழற் சூரியன்
அணைந்து போகும்
நாள் நாடகத்தின் இறுதிக் காட்சி.
வானில் இறங்கின வண்ணத் திரைகள்.

**37.** இக் கவிதையில் இடம்பெறும் வருணனை எதுபற்றியது?
(1) சூரிய அஸ்தமனம் (2) கடல் (3) மாலைப் பொழுது (4) வானம்

**38.** 'நாடகம்' என்றும் அதன் 'இறுதிக் காட்சி' என்றும் உருவகிக்கப்படுவன முறையே
(1) பகற்பொழுதும் இரவும் (2) பகற்பொழுதும் மாலைப் பொழுதும்
(3) மாலைப் பொழுதும் இரவும் (4) இரவும் விடியலும்

**39.** 'பறவைப் பெண்கள் அலறித் தடுத்தும்...' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள அணிகள்
(1) உவமையும் உருவகமும் (2) உருவகமும் உயர்வுநவிற்சியும்
(3) உவமையும் தற்குறிப்பேற்றமும் (4) உருவகமும் தற்குறிப்பேற்றமும்

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - அவற்றுள் கணிதத்தின் அடிப்படைக் கூறாக எண்ணும் மொழியின் அடிப்படைக் கூறாக எழுத்தும் அமைகின்றன.

ஆ - அவை கணிதம், மொழி என்பனவாகும்.

இ - அறிவானது பல துறைகளாகப் பரந்து விரிந்துள்ளது.

ஈ - அதனாலேயே 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்று பெரியவர்கள் கூறினர்.

உ - அவ்வாறான எந்த அறிவுத் துறைக்கும் அடிப்படையானவையாக இரண்டு விடயங்கள் கருதப்படுகின்றன.

(1) அ, இ, உ, ஆ, ஈ (2) இ, ஆ, ஈ, உ, அ
(3) இ, உ, ஆ, அ, ஈ (4) ஈ, இ, அ, ஆ, உ

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதாலோ கடைப்பிடித்து ஒழுக முயல்வதாலோதான் உலகம் இனிமை தருகின்றது.
- இந்த வாக்கியத்தின் எழுவாய் யாது?

(ii) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'அழுவானை யிவன்யா ரென்று'

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'பழத்த நம்பி ஏலேலோ, நானிருக்கேன்'

(iv) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
ஆற்றிலேயா கடலிலேயா என்றாள்

(v) - வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்துக்குள்ளானது.
- அந்த விபத்தில் காயமுற்றவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கி எழுதுக.

(vi) 'நனை' என்ற வினையடி தன்வினையாகவும் பிறவினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வினைமுற்றினை ஆக்குக.

(vii) பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழை உள்ள சொற்களை இனங்கண்டு அவற்றைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.
கலைமானி, வர்த்தமாணி, வெப்பமானி, விமானி

(viii) 'படு' என்பது வினையாகவும் பெயரடையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

(ix) 'ஓதிப்படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்'
- இங்கு ஆகுபெயராக இடம்பெற்ற சொல் யாது?
- அது என்ன வகை ஆகுபெயர்?

(x) திருக்குறளிற் கூறப்படும் கருத்துக்கள் எமது வாழ்வை வளப்படுத்துவதாக உள்ளன.
- இந்த வாக்கியத்தில் உள்ள வழுவை இனங்கண்டு வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

(20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) இன்று தினசரிப் பத்திரிகைகள் பலராலும் வாசிக்கப்படுகின்றன. இவை சிறுவர், பெரியோர் என்ற வேறுபாடின்றி சகலரினதும் அறிவு, மொழி வளர்ச்சி, பொழுதுபோக்கு, இலக்கிய உணர்வு, கலை, கலாசார வளர்ச்சி முதலானவற்றிற்கு உதவுகின்றன. இவற்றை உள்ளடக்கி ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) நாம் ஒருபோதும் சுயநலவாதிகளாக வாழக்கூடாது. பிறருக்காக வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. பிறருக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் பலர் உள்ளனர். நோயால் பீடிக்கப்பட்டவர்கள், வறுமையில் வாடுபவர்கள், முதியோர்கள் எனப் பலருக்கும் எம்மால் இயன்ற உதவியைச் செய்யமுடியும். இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கி மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் சாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என்று கருதும் ஒருவருக்கும் அவற்றால் பாதகமான விளைவுகளே ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் ஓர் **உரையாடல்.**

(iv) நினைத்துப் பார்க்க முடியவில்லை! அவன் கல்வியில் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தான்! ஆயின் போதைவஸ்து என்னும் அரக்கனால் அவன் சீரழிக்கப்பட்டான். அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அவமானங்களும் சொல்லிமாளா... ஆயினும் அவன் மறுவாழ்வு பெற்றான். என்ற வகையில் போதைவஸ்துப் பாவனைக்கு எதிரான உணர்வைத் தூண்டுவதான ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

வாழ்க்கையிலுள்ள செய்திகளை உள்ளபடியே எடுத்துக் காட்டுவன நாட்டுப் பாடல்கள். இவற்றை வாழ்க்கை அனுபவத்தின் சாரம் என்று கூறலாம். ஆங்கிலத்திற் 'பாமரர் பாட்டுக்கள்' (Folk Songs) என்று குறிக்கும் பாடல்களையே நாட்டுப் பாடல்கள் என்கின்றோம். இப்பாடல்களை யார் எக்காலத்திற் பாடினார் எனக் கூற இயலாது. நீண்ட காலமாக இவை வாய்மொழியாகவும் கேள்வி வழியாகவும் தொடர்ந்து வழங்கியிருக்கின்றன.

நாட்டுப் பாடல்களில் இலக்கண வழுக்கள் இருக்கக்கூடும்; இவை யாப்பிலக்கண விதிகளுக்கு முரண்படப் பாடப்பட்டிருக்கக் கூடும். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் குற்றத்திற்கு இலக்காகி இருக்கக்கூடும். ஆயினும் மக்கள் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் இவற்றிற்கு உண்டு. கூற எடுத்ததை நேர் முகமாக வெளிப்படையாக எளிய முறையில் இவை சொல்வதனால் இவற்றிலே ஒரு நயம் காணப்படுகின்றது; அழகு இருக்கின்றது. இவை உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றன. இதனாலே இவை கல்வியறிவு இல்லாத பொது மக்களின் உள்ளத்திலே அதிக காலமாக நிலைத்திருக்கின்றன.

நாட்டுப் பாடல்களுக்குத் தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. மக்கள் இனம் உண்டான போது அவையும் உண்டாயின; அது முடிவடையும் போது அவையும் முடிவடையும். இடைக்காலத்தில் மக்களின் நடை உடை பாவனைகளை ஏற்று, இவை வளர்ந்து வந்திருக்கின்றன. அந்த அந்தக் காலத்துக்கு ஏற்ற செய்திகளையும் முறைகளையும் பண்பாட்டையும் இவை ஏற்றிருக்கின்றன. நாட்டில் உண்டாகும் புதுமைகள் முதன் முதலில் நாட்டுப் பாடல்களிலேயே வரும். எனவே, நாட்டுப் பாடல்கள் காலந்தோறும் இடந்தோறும் பரவி, மாறியும், விரிந்தும், சுருங்கியும் வழங்குகின்றன.

(10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பண்டைத் தமிழகத்தில் பட்டினங்களும் கிராமங்களும் செழித்தோங்கின. பிற நாடுகளுடன் வாணிபம் ஒழுங்காக நடைபெற்றதால் நாட்டில் செல்வம் செழித்தது. மேற்கே வெகு தூரத்திலுள்ள எகிப்து, கிரேக்கம், ரோம் முதலிய நாடுகளுடன் கடல்கடந்து போகும் கப்பல்கள் மூலம் நடைபெற்ற வியாபாரம் வளர்ந்தது. மிளகு, முத்து, தந்தம், சந்தனம், ஏலக்காய், துணி, தாவர எண்ணெய், விலங்குகளின் தோல்கள், மயில்கள், குரங்குகள் முதலியவைகள் ஏற்றுமதி செய்யப் பெற்றன. ரோம் நாட்டிலிருந்து தங்கம், வெள்ளி நாணயங்களும், கிரேக்க நாட்டிலிருந்து மது முதலிய பண்டங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. கிழக்கே கடல் கடந்து கலங்களில் சென்று கடாரம் முதலிய நாடுகளிலும், சாவகம் முதலிய தீவுகளிலும் தமிழர் குடியேறினர். இதற்கும் வாணிபத்திற்கும் உதவும் முறையில் கடற்கரையோரங்களில் பல துறைமுகங்கள் கலங்கரை விளக்கங்களுடனும், சுங்கச் சாலைகளுடனும், அகன்ற வீதிகளுடனும் அமைந்திருந்தன. வாணிபத்தின் பொருட்டு வந்த பல மொழிகளைப் பேசும் பிற நாட்டினர் இத் துறைமுகங்களில் குடியேறி, மக்களுடன் நெருங்கிப் பழகி அரசருக்கும் பணியாற்றினர். இவ்வாறு பணியாற்றிய யவனரைப் பற்றிய குறிப்புகள் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப் பெறுகின்றன; இவர் அரசருக்கும் அரண்மனைகளுக்கும் காவல் வேலை பார்த்ததாகத் தெரிகிறது. தமிழ் அரசர் தங்கள் தூதர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தங்கள் நாட்டின் தேவைகளைப் பெற்றுக் கொண்டதுமன்றி, பெருமையையும் நிலை நாட்டினர்.

(i) பண்டைத் தமிழகத்தில் செல்வம் செழித்ததற்குக் காரணம் யாது?

(ii) பண்டைத் தமிழகம், வியாபார ரீதியில் தொடர்புகொண்டிருந்த மேலைநாடுகள் யாவை?

(iii) பண்டைத் தமிழர் கிழக்கே கடல் கடந்து குடியேறிய இடங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

(iv) கடற்கரை ஓரங்களில் அமைந்திருந்த துறைமுகங்கள் எவ்வெவற்றுக்கு உதவும் முறையில் அமைந்திருந்தன?

(v) தமிழரசர்கள் தங்கள் நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பெருமையை நிலை நாட்டுவதற்கும் செய்த காரியம் யாது?

(10 புள்ளிகள்)

**5.** நுளம்பினால் பரவும் டெங்கு என்னும் உயிர்க்கொல்லி நோயின் தாக்கம் இன்று பெருமளவில் அதிகரித்துள்ளது; பலர் மரணித்துமுள்ளனர். நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதன் மூலமே நோயைக் கட்டுப்படுத்தலாம். எனவே டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கான காரணிகளை இல்லாமற் செய்யவேண்டிய கடமையை வலியுறுத்தி காந்திநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு காந்திநகர் பிரதேச சபைக்குள் அடங்கும் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளர் க.பாலசுப்பிரமணியன் என்று உம்மைக் கருதிக்கொண்டு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

பொன்னகர் ஊரில் உள்ள சந்திரோதயம் மத்திய மகாவித்தியாலயத்தின் விளையாட்டுக் குழுவின் செயலாளர் ச.மாணிக்கவாசகன் என்று உம்மைக் கருதிக்கொண்டு அந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுகள், தடகளப் போட்டிகள், சுவட்டு நிகழ்ச்சிகள், பரிசளிப்பு முதலானவை தொடர்பில் **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

❊ ❊ ❊

Department of Examinations Sri Lanka

OL/2023(2024)/22-T-III

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 | T | III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "மடைத் தலையில் ஓடுமீன் ஓட
உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு"

(அ) மடைத்தலை
(ஆ) உறுமீன்
என்பவற்றின் பொருளைத் தருக.

(ii) "பொய்மைசேர்
மதியினிற்புலை நாத்திகங் கூறுவர்"

(அ) நாத்திகம் என்றால் என்ன?
(ஆ) அதில் ஆசிரியருக்குள்ள வெறுப்பு எவ்வாறு வெளிப்படுகிறது?

(iii) "தோன்றல் துயர்க்கடலின் ஏக"
இங்கு,
(அ) தோன்றல் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணியை இனங்காண்க.

(iv) "கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி"
(அ) கொடி எனக் குறிப்பிடப்படுபவள் யார்?
(ஆ) அவளுடைய துயரம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(v) "என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினிங்க"
இக் கூற்று,
(அ) யாரால்
(ஆ) யாருக்குக் கூறப்பட்டது?

(vi) "பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே"
(அ) கேண்மை என்பதன் பொருள் யாது?
(ஆ) 'வளைகள் செறிந்தன' என்பதனால் வெளிப்படுத்தப்படுவது யாது?

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

(vii) "நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதிதன் துணைவியர்கள் சூழவரும் கோலம்"

(அ) 'நிர்மலமாம் வான்' என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

(ஆ) நிறைமதிதன் துணைவியர்கள் எனப்படுவன யாவை?

(viii) "கோது இலான் இந்த மொழி கூறுதலும்
மாமாயன் கூறல் உற்றான்"

(அ) கோது இலான்

(ஆ) மாமாயன்

எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

(ix) "வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார் செம்பொற் றிரளுடனே"

(அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

(ஆ) 'செம்பொற்றிரள்' என மறைமுகமாகக் குறிப்பிடப்படுவது யாது?

(x) (அ) 'கூனலிளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்'
எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) 'கூனல் இளம்பிறை' என்பதை விளக்குக.

(20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினும் தட்டு வாராமலே அன்னதானத்துக்கு
மார்தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே.

(அ) பஞ்சத்தின் கொடுமை

(ஆ) சீதக்காதியின் கொடைத்திறம்

என்பன எவ்வாறு உணர்த்தப்படுகின்றன?

(ii) கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை - உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி
ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய் தீங்கை - அல்லா எள்ளளவும் ஏற்க மாட்டான்

(அ) காதல்மீது தலைவன் கொண்டுள்ள தீவிரம்

(ஆ) அவனது அறவுணர்வு

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(iii) கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்பேம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே.

(அ) பொதுவாக பெண்களை ஆண்கள் எவ்வாறு நடத்துகின்றனர்

(ஆ) அவ்வாறு நடத்துபவர்கள் தொடர்பில் கவிஞர் எத்தகைய மனநிலையினைக் கொண்டுள்ளார்

என்பவற்றை விளக்குக.

[பக். 3 ஐப் பார்க்க



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

(iv) ஒரு திடீர் உந்துதலால்தான் கம்பியூட்டர் ஒன்று வாங்குவதாக முதல்நாள் இரவு எங்கள் வீட்டில் முடிவாகியது. என் ஒன்பது வயது மகன் அரவிந்தன் தன்னுடைய சிநேகிதர்கள் எல்லாரிடமும் கம்பியூட்டர் இருப்பதாக அளந்தான். என் ஆசை மனைவியோ ஆர்மோனியப் பெட்டிபோல இதையும் வளைத்துவிடலாம் என்று ஆர்வமான கனவுகளுடன் காத்திருந்தாள். இது என்ன வெண்டைக்காயா, நுனியை முறித்துப் பார்த்து வாங்க? கம்பியூட்டர் முந்திப்பிந்தி வாங்கியும் அனுபவமில்லை. கடைக்காரனுடைய முகலாவண்யம் கதைப்பதற்கு ஆசையூட்டுவதாகவும் இல்லை. வீர்யம் நிறைந்தவன் போலக் காணப்பட்டான். அவன் தலையில் இருக்கவேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தன. எனக்கு அவன் சொன்ன விளக்கங்களும், கேட்ட கேள்விகளும் தலைகால் புரியவில்லை.

(அ) கம்பியூட்டர் ஒன்றை வாங்குவது இலகுவானதல்ல என்பது எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

(ஆ) விற்பனையாளரின் தலையில் முடி இல்லை என்பதை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்?

(v) இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகிறான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்வதில் அவன் திண்டாடுகின்றான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா? அல்லது கைகேயிக்குக் கூறிய சத்தியவாக்கை நிலைநாட்டுவதா? இந்த தருமசங்கடத்தின் மத்தியிலே ஊசலாடுகின்ற அரசன் நினைக்கின்றான்: அரசியல் நிலைமாறக் கூடியது, சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்; நிலைமாறாத இயல்புள்ள சத்தியவாக்கைக் கடைப்பிடிப்பேன். இதுதான் அரசனது முடிபு. நடுநிலையிலே நின்று வாக்குறுதியைக் காப்பாற்றிச் சத்தியத்திலே நிலைநின்று உயிரைத் தியாகஞ் செய்கின்றான்.

(அ) தசரதன் 'ஊசலாடுகின்றான்' என்பதன் மூலம் ஆசிரியர் உணர்த்துவது யாது?

(ஆ) சத்தியத்தின்மீது தசரதன் கொண்ட உறுதிப்பாடு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(20 புள்ளிகள்)

**3.** **குற்றாலக் குறவஞ்சியில்,**

(அ) திரிகூட மலையின் உயர்ச்சி

(ஆ) அதன் வளம்

ஆகியனவற்றை வெளிப்படுத்துவதில் ஆசிரியர் காட்டும் திறனைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

(அ) **பேதைமை** என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளவற்றைத் தெளிவுபடுத்துக.

(ஆ) அதில் வள்ளுவர் கையாண்ட அணிகளை இனங்கண்டு, அவற்றில் நீர்காணும் நயங்களை விளக்குக.

(15 புள்ளிகள்)

**4.** **அற்றைத்திங்கள்** என்ற நாடகத்தில்,

(அ) பாரி இருந்த காலத்திலும் அவனை இழந்த காலத்திலும் பறம்புமலை மக்களின் மனநிலை

(ஆ) பாரிமகளிரும் கபிலரும் தம் நாட்டின்மீது கொண்ட ஈடுபாடு

ஆகியன புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்

(அ) மூத்தம்மாவின் ஆளுமைத் திறன்

(ஆ) அந்த ஆளுமை காசிமில் செல்வாக்குச் செலுத்திய விதம்

ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** **கிருட்டினன் தூதுச் சருக்கத்தில்,**

(அ) குருநாட்டின் வளம்

(ஆ) கிருட்டினன் பெருமை

என்பன வெளிப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**6.** **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்,

(அ) வாதமகாசபையின் இயல்புகள்

(ஆ) நாவலர் எழுந்தமை

என்பனவற்றை ஆசிரியர் வெளிப்படுத்தும் வகையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**7.** **தேயிலைத் தோட்டத்திலே...** என்ற கவிதையில்

(அ) தோட்டத் தொழிலாளர் மீதான கவிஞரின் பரிவு

(ஆ) அவர்களைப் புறக்கணிக்கும் சமூகம்மீது கவிஞர் முன்வைக்கும் விமர்சனம்

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

* * *



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka